பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 17 | திங்கட்கிழமை 04.12.2023 | அதிர்வு 125

### இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில்

## ரொஷான் எம்.பிக்கு எதிராக முறைப்பாடு

இலங்கை கிரிக்கெட் நிறுவனம், முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரொஷான் ரணசிங்கவுக்கு எதிராக இலஞ்ச, ஊழல் விசாரணை 06▶

# எதிரியே பாராட்டிப் புகழும் தலைவர் பிரபாகரனை போலிக் காணொலி மூலம் கொச்சைப்படுத்தாதீர்!



### மனோ எம்.பி. கவலையுடன் தெரிவிப்பு

"எதிரியே பாராட்டிப் புகழும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் போலிக் காணொலிகளை வெளியிட்டுக் கேவலப்படுத்துவது எமக்கு மனக் கவலையளிக்கின்றது."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான 06▶



# வாள்வெட்டுக் குழுவினர் அட்டகாசம்! பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்!!

## தெல்லிப்பழை, மல்லாகம் பகுதிகளில் பதற்றம் எஸ்.ரி.எவ். குவிப்பு; இரவிரவாகத் தேடுதல் வேட்டை

(எஸ்.நிதர்ஷன்)

**யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை பொலிஸ் நிலையம் அருகில் நேற்று மாலை வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டு ஹயஸ் வானில் தப்பிச் சென்ற கும்பலை நோக்கிப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தையடுத்து அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.** 06▶




# சென்னை விமான நிலையத்தில் மழை வெள்ளம்; சேவைகள் ரத்து




சென்னையில் நிலவி வரும் கன மழை காரணமாக சென்னை விமான நிலையத்தில் பெருமளவான நீர் தேங்கியுள்ளது.

இதன் காரணமாக சென்னை விமான நிலையம் இன்று 06▶

### தமிழ் இளைஞர்களை அழிக்கும் நோக்குடன்

## வடக்கில் இன்று போதைப்பொருள் வியாபாரம் தீவிரம்

### வினா எம்.பி. காட்டம்



(விரிவான செய்தி 2ஆம் பக்கத்தில்)

### பாதுகாப்பு உத்தியோகத்தர் கடத்தப்பட்டு தாக்குதல்

## களனிப் பல்கலைக்கழகம் மறு அறிவித்தல் வரை மூடல்

களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பிரிவுகளும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மருத்துவ பீட விடுதிகள் தவிர்ந்த பல்கலைக்கழகத்தின் அனைத்து விடுதிகளும் 06▶






இலங்கையின் வர்த்தக, வியாபார விடயங்களை ஒட்டி பல்வேறு அச்சு ஊடகங்கள் வெளியானாலும், தனக்கெனத் தனியான – கௌரவமான – உயர்வான – இடத்தைத் தக்க வைத்திருப்பது LMD என்ற Lanka Monthly Digest என்னும் மாத சஞ்சிகைதான். கடந்த சுமார் 30 வருடங்களாக அது வெளிவருகின்றது. பெரும்பாலும் முக்கியமாக யாரேனும் முன்னணி வர்த்தகப் புள்ளி ஒருவரின் படத்தை 03▶

# தமிழ் இளைஞர்களை அழிக்கும் நோக்குடன் வடக்கில் போதைப்பொருள் விற்பனை தீவிரம்

## சபையில் வினோ எம்.பி. காட்டம்



**“போரில் தமிழ் இளைஞர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்களோ, அதேபோன்று போதைப் பொருள் ஊடாகவும் தமிழ் இளைஞர்கள் அழிக்கப்படுகின்றார்கள். வடக்கில் தீவிரமடைந்துள்ள போதைப்பொருள் பாவனையில் விற்பவர்கள் யார், வாங்குபவர்கள் யார் என்பதை அறிந்தும் பொலிஸார் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமல் உள்ளார்கள்.”**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் குற்றஞ்சாட்டினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகாரங்கள் அமைச்சு மற்றும் மகளிர்,சிறுவர் விவகார அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மன்னார் மாவட்டத்தில் நறுவிலிக்குளம் பிரதேசத்தில் மன்னார் மாவட்டத்திற்கான பொது மைதானத்துக்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வெவ்வேறு காரணங்களால் நிறுத்தப்பட்டு இன்று வரை அந்தப் பணிகள் நிறைவு பெறவில்லை.

ஏறக்குறைய 50 சதவீத நிதி ஒதுக்குகைகளுக்கன வேலைத்திட்டங்கள் நடந்தேறியுள்ளன. 2023ஆம் ஆண்டுக்குள் மைதானப் பணிகள் பூர்த்தியடையும் என்று அமைச்சாலும் அதிகாரிகளினாலும் உறுதி கூறப்பட்டாலும் பூர்த்தியடையவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானப் பணிகள் 9 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டன.

இன்னும் பூர்த்தியடையவில்லை. மத்திய அரசிடமிருந்து மாகாண சபைக்கு அந்த மைதானம் இன்னும் கையளிக்கப்படவில்லை.

2014 ஆம் ஆண்டு அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயிடம் இந்த மைதானம் எப்போது திறக்கப்படும் எனக் கேட்டேன்.

2015 ஆம் ஆண்டு தேசிய விளையாட்டு விழா அந்த மைதானத்தில்தான் நடக்கும் என்றார். ஆனால், இன்று வரை மைதான வேலைகளே பூர்த்தி செய்யப்படவில்லை.

வவுனியா மாவட்டத்திலும் இதே போன்றே ஓமந்தையில் இருக்கின்ற பொது மைதானப் பணிகள் ஏறக்குறைய பூர்த்தியாகி விட்டன. ஆனால் மின்சார இணைப்பு இன்னும் வழங்கப்படவில்லை.

அதனால் விளையாட்டு வீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் அந்த மைதானம் இன்னும் கையளிக்கப்படவில்லை. ஆகவே, உடனடியாக இந்த மைதானங்களை வீரர்களிடம் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொறுப்புக்கொடுக்கின்ற வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

முல்லைத்தீவில் மாவட்டத்துக்குரிய மைதானம் இல்லை. ஒரு மைதானத்துக்குரிய காணியை இனம் காண்பதற்கு எல்லோருமே தடையாக இருந்துள்ளார்கள்.

3 இடங்களில் காணி பார்த்தார்கள். ஆனால், ஒரு மைதானத்தை அமைக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒவ்வொரு காரணம் கூறிக் காலம் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அங்குள்ள இளைஞர்களுக்கு விளையாட்டுக்களில் பங்கேற்கும் வாய்ப்பு மறுக்கப்படுகின்றது.

அண்மையில் முல்லைத்தீவு, முள்ளியவளையை சேர்ந்த 72 வயதான அகிலத்திரு நாயகி என்ற வீராங்கனை பிலிப்பைன்ஸில் நடைபெற்ற சர்வதேச போட்டியில் இரு தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.

வன்னியில் 72 வயதிலும் சாதிக்கக் கூடிய வீர, வீராங்கனைகள் இருக்கின்றனர். இவ்வாறான நிலையில் இளைஞர், யுவதிகளுக்கு விளையாட்டுக்களில் வாய்ப்புக்கள் வழங்கப்படும் பட்சத்தில் தேசிய, சர்வதேச மட்டத்தில் பிரகாசிப்பார்கள். அதற்கான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுங்கள்.

வடக்கு மாகாணத்தில் இன்று இளைஞர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி வருகின்றனர். அவர்கள் வேறு திசைக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். சிலர் தற்கொலை செய்கின்றனர். பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் கூட மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இளைஞர்களுக்குரிய வாய்ப்புக்கள்,வசதிகள் மறுக்கப்பட்டதாலேயே ஆயுதப் போராட்டம் உருவானது. இளைஞர்களைப் போதைப்பொருள் பாவனையிலிருந்து தடுப்பதற்கான எந்த நடவடிக்கையும் அங்கு இல்லை.

போதைப்பொருள் புழக்கத்துக்கு அங்கு பொலிஸார் உடந்தையாக உள்ளனர். போதைப்பொருள் விற்போர், வாங்குவோரைப் பொலிஸாருக்குத் தெரியும். பாவனையாளர்களையம் பொலிஸாருக்கு தெரியும். ஆனால், போரில் எவ்வாறு இளைஞர்கள் கொல்லப்பட்டார்களோ அதேபோன்று இளைஞர்கள் போதைப்பொருள் பாவனை மூலமும் அழிவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.” - என்றார்.



# புதையல் தோண்ட முயன்ற 9 பேர் கற்பிட்டியில் கைது

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – கற்பிட்டி தேதாவாடிய பிரதான வீதியிலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் புதையல் தோண்டுவதற்கு முயற்சித்தனர் எனச் சந்தேகிக்கப்படும் 9 பேர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தச் சுற்றுலா விடுதியின் உரிமையாளர், அங்கு பணிபுரியும் ஊழியர்கள் உள்ளிட்ட 9 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மண்வெட்டி, கோடரி உள்ளிட்ட பொருள்களும், பூஜைக்கு பயன்படுத்தப்பட்ட பொருள்களும் இதன்போது பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தும்மலசூரிய மற்றும் கற்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐஸுடன் சிக்கியவர் விளக்க மறியலில்!

(சப்னா றிபாஸ்)

ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட நபரை 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதான வீதியில் 120 மில்லிகிராம் ஐஸ் போதை பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இச்சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அந்தப் பிரதேசத்திற்கு சென்ற விசேட அதிரடிப்படையினர் அவரைக் கைது செய்து நேற்று திங்கட்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்றுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அட்டையில் தாங்கி அது பிரசுரமாகும்.

இலங்கையில் உயர்வான வர்த்தக மையங்களில் மட்டும் அது விநியோகச் சுற்றில் இருப்பதை அவதானிக்க முடியும்.

அது, தற்போது ரணில் அரசு சமர்ப்பித்திருக்கும் வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் இலங்கை வர்த்தக சமூகத்தின் கருத்து நிலையை வெளிப்படுத்தி இருக்கின்றது.

அடுத்த ஆண்டுக்கான எதிர்பார்ப்புகள் இந்த வரவு – செலவு திட்டத்தை ஒட்டி வர்த்தக சமூகத்தில் துளிர்விட வழி ஏற்படவில்லை என்று அது கூறியுள்ளது.

பொருளாதார முயற்சி தொடர்பான நம்பிக்கை கடந்த ஒக்டோபர் மாதத்தில் வர்த்தக சமூகத்தினர் இடையே 12 வீதமாக இருந்தது. அது இப்போது 8 வீதமாகக் குறைந்துள்ளது.

கடந்த ஒக்டோபரில் 27 வீதமானோர் பொருளாதாரம் அடுத்த 12 மாதங்களில் ஸ்திரமாகும் என்று நம்பினர். அந்த நம்பிக்கை இப்போது 19 வீதமாகக் குறைந்துள்ளது.

73 வீதமான வணிக சமூகத்தினர் அடுத்த 12 மாதங்களில் பொருளாதார நிலைமை முன்னரை விட மிக மோசமாகும் என்று நினைக்கின்றார்கள் என அந்த ஏடு கருத்துக் கணிப்பை வெளியிட்டு இருக்கின்றது.

அந்த சஞ்சிகையின் கருத்துப்படிப் பார்த்தால் பொருளாதார மீட்பர் போல தன்னை முன்னிறுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தல் நெருங்கும் சமயத்தில் ராஜபக்ஷ சகோதரர்களின் தரத்துக்கு வந்து விடுவார் என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது.



# போதையில் நீதிமன்ற விசாரணைக்கு இடையூறு செய்த பொலிஸ் அலுவலர்

## கைதாகி இன்று வரை விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், டிசம்பர். 05

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மது போதையில் விசாரணைக்கு இடையூறு செய்த பொலிஸ் உத்தியோகத்தரொருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்றுத் திங்கட்கிழமை மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் துன்னாலை பகுதியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நீதிமன்றத்திற்கு சாட்சியமளிப்பதற்காக வந்திருந்தார்.

இந்நிலையில் அந்நபர் மது போதையில் நீதிமன்ற அமர்வில் விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளார்.

அவரைக் கைது செய்த பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

சந்தேக நபரை இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் சந்தேக நபரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தவும் உத்தரவிட்டார்.

# நீதிமன்றத்தின் வழக்குப் பொருளான கஞ்சாவைக் கையாடி விற்றவர் கைது

கஞ்சா கடத்தலுடன் தொடர்புடைய நீதிமன்ற அலுவலக உதவியாளர் ஒருவரும் வெல்லவாய நீதிவான் நீதிமன்றில் அலுவலக உதவியாளர் ஒருவரும் வலான ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் பதுளை மற்றும் ஹப்புத்தளை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வலான ஊழல் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, ஹப்புத்தளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 555 கிராம் கஞ்சாவை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட ஹப்புத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய சந்தேகநபர், ஊழல் தடுப்பு பிரிவின் அதிகாரிகளால் கொஸ்லந்த பொலிஸாரிடம் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதையடுத்து சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, அவருக்குஅந்த கஞ்சாவை வழங்கிய மற்றுமொரு சந்தேக நபர் தொடர்பிலும் தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி, சந்தேகநபர் கடந்த முதலாம் திகதி மாலை கொஸ்லந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஐ.எஸ்.பில்ல பகுதிக்கு மற்றுமொரு தொகுதி கஞ்சாவை முதலாம் சந்தேகநபரிடம் வழங்குவதற்காகவும், கொடுக்கப்பட்ட கஞ்சா கையிருப்புக்கான பணத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் வந்த போது, கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 4 கிலோ 305 கிராம் கஞ்சா மற்றும் கையடக்கத் தொலைபேசியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் 43 வயதுடைய உவமவெலகம பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

சந்தேகநபரின் வீட்டை சோதனையிட்ட போது, அந்த வீட்டில் மேலும் 02 கிலோ 130 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் சிறிய இலத்திரனியல் தராசும் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேக நபர் வெல்லவாய நீதிவான் நீதிமன்றில் அலுவலக உதவியாளராகக் கடமையாற்றுவதுடன் நீதிமன்றில் வழக்குப் பொருளாக வைக்கப்பட்டிருந்த கஞ்சாவை எடுத்து வந்துள்ளார் என்பது பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் தடுப்புக்காவல் உத்தரவுக்கு அமைய கொஸ்லந்த பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு ஊழல் ஒழிப்பு பிரிவினரால் மேலதிக விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

# இன்று காசாப் போரை நிறுத்துமாறு கோருவோர் அன்று தமிழர்களுக்காக ஏன் குரல் எழுப்பவில்லை?

## முஸ்லிம் தலைமைகளை நோக்கி ரெலோவின் சபா குகதாஸ் கேள்வி



இஸ்ரேலைப் போரை நிறுத்துமாறு கோரும் முஸ்லிம் தலைமைகள் அன்று தமிழர்களுக்காக ஏன் குரல் எழுப்பவில்லை என ரெலோ அமைப்பின் யாழ் மாவட்ட அமைப்பாளரும் வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினருமான சபா குகதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

பலஸ்தினத்தின் காசாவில் இஸ்ரேலின் தாக்குதலினால் இன்று கொல்லப்படும் மக்களுக்காக குரல் கொடுப்பது கட்டாயம். ஏனெனில் அப்பாவிப் பொது மக்கள் அழிக்கப்படுகின்றனர். இதனை உலகின் பல தரப்பட்ட பிரிவினரும் அமைப்புக்களும் கண்டித்துள்ளனர்.

இஸ்ரேல் யுத்தத்தை நிறுத்த உலக நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என இலங்கைப் நாடாளுமன்றத்தில் முஸ்லிம் தலைவர்கள் தொடர்ந்து குரல் கொடுக்கின்றனர். அதனை நாமும் வரவேற்கின்றோம்.


ஆனால் 2009 ஆம் ஆண்டுக்கு முன் ராஜபக்ஷ அரசாங்கத்தின் அமைச்சர்களாக இருந்த இதே முஸ்லிம் தலைவர்கள் வடக்கில் வன்னி மாவட்டத்தில் கொத்துக் கொத்தாக அப்பாவி சகோதர ஒரே மொழி பேசும் தமிழர்கள் கொல்லப்படும் போது கண்டும் காணாதவர்கள் போல இருந்தமை மாத்திரமல்ல, போரை நடாத்துவதற்கு முழுமையான ஆதரவை வழங்கியமையை நினைத்து பாதிக்கப்பட்ட தமி ழர்கள் மனவேதனை அடைந்தனர்.

இன்று இஸ்ரேல் காசாவில் குண்டு போட்டு குழந்தைகள், பெரியவர்கள் என அப்பாவி மக்களை அழிப்பது போன்று தான் அன்று முள்ளிவாய்க்கால் இறுதிப் போர்வரை இஸ்ரேல் விமானங்களும் விமானிகளும் ராஜபக்ஷாக்களின் ஏவலில் செஞ்சோலை மாணவிகள், வைத்தியசாலைகள், தற்காலிக மக்களின் முகாம்கள், சிறுவர் இல்லங்கள் போன்றவற்றில் ஆயிரக்கணக்கான அப்பாவிச் சிறுவர்கள், மாணவர்கள், பொதுமக்கள் போன்றோரை அழிக்கும் போது, அன்று இதே நாடாளுமன்றத்துக்குள் ஒரு வார்த்தை கூட பேசாமல் அமைச்சரவையில் ஆதரவு வழங்கியமையைப் பாதிக்கப்பட்ட சகோதர தமிழ் மக்கள் இலகுவில் மறக்கமுடியாது மனம் குமுறுகின்றனர்.

இன்று தொலைவில் உள்ள நாடுகளிடம் பலஸ்தீன் மக்களை காப்பாற்றுமாறு நீங்கள் கோருவதை எவ்வளவு தூரம் செவி சாய்ப்பார்கள் என்பது ஒரு கேள்வியாக இருந்தாலும், அன்று உங்கள் ஆதரவுடன் இருந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் கபினட் அமைச்சர்களாக இருந்த உங்களால் மிக இலகுவாக கொல்லப்பட்ட அனைவரையும் காப்பாற்ற முடியா விட்டாலும், இன்று காசா மீது காட்டும் மனிதாபிமானத்தை அன்று ஈழத் தமிழர்களுக்கும் காட்டினீர்கள் என்று வரலாறு பதிவு செய்திருக்கும். இவ்வாறான பாரபட்சமான நிலைப்பாட்டை வரலாறு இலகுவில் மன்னிப்பதில்லை. - எனவும் தெரிவித்துள்ளார்.

# அடம்பன் பொலிஸார் அச்சுறுத்தல் அவல நிலையில் குடும்பம் முறையீடு

## துப்பாக்கியால் சுட்டும் மிரட்டினராம்





மன்னார் குருவில், வசந்தபுரம் கிராமத்தில் வசிக்கும் குடும்பம் ஒன்று அடம்பன் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார் தங்களுக்குத் தொடர் அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர் எனவும், தங்களை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர் எனவும், தாங்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர் எனவும் தொடர்ந்தும் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, ஆகையால் தங்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் எனக் கோரி மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்றுத் திங்கட்கிழமை மதியம் முறையீடு ஒன்றைக் கையளித்துள்ளனர்.

இந்த முறையீட்டின் பிரதிகளை மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் ஆகியவற்றிற்கும் அவர்கள் கையளித்துள்ளனர்.

குருவில்வசந்தபுரம், வட்டக்கண்டல்என்றமுகவரியைசேர்ந்தய.சகாயராணி என்ற நான்கு பிள்ளைகளின் தாயே இவ்வாறு முறையீடு ஒன்றைக் கையளித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் அடம்பன் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் 3 பேர் சிவில் உடையில் எனது வீட்டுக்கு வந்து கணவரை கேட்டு விட்டு வீடு மற்றும் வீட்டுச் சூழலை முழுமையாகச் சோதனை செய்தனர்.

எனது கணவர் தோட்ட வேலை செய்து விட்டு டீசல் வாங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு சென்று விட்டார். நானும் எனது பிள்ளைகளும் வீட்டில் இருந்தோம்.

தொடர்ந்தும் எனது கணவரை எங்களிடம் கேட்டு தகாத வார்த்தைகளினால்எங்களைப்பேசிஅச்சுறுத்தினார்கள்.

பின்னர்எனதுமகனைஒபார்த்து உனது பாக்கெட்டில் கஞ்சாவை வைத்து, உன்னைக் கைது செய்து, 14 நாள் சிறையில் வைப்போம் என மிரட்டி உள்ளனர். அதனைத் தொடர்ந்து வீட்டை விட்டுச் சென்றனர்.

மீண்டும் 2 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணியளவில் எனது கணவர் தோட்ட வேலை செய்து முடித்து விட்டு மாடு கட்டுவதற்கு சென்றிருந்தார்.

அப்போது பொலிஸார் எனக் கூறிக்கொண்டு சிவில் உடையில் வீட்டுக்கு வந்தவர்கள் கணவரையும். மகனையும் தகாத வார்த்தைகளால் பேசி கைது செய்யப் போகிறார்கள் எனக் கூறினார்கள்.

அவர்கள் என்ற குற்றம் செய்தார்கள் என்று வந்தவர்களிடம் நான் கேட்டேன்.

இதன் போது எனது கணவரும் வீட்டுக்கு வந்தார். எனது கணவரைப் பிடித்து கைவிலங்கு போட எத்தனித்தனர்.

பின்னர் துப்பாக்கியை எடுத்து எங்களை நோக்கிச் சுட்டனர். எனினும் நாங்கள் மயிரிழையில் தப்பினோம். அந்தப் பொலிஸார் மதுபோதையில் காணப்பட்டனர். பின்னர் எங்களை அச்சுறுத்தி விட்டு சென்றனர்.

மூன்றாம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று காலை ஆலயத்துக்கு நாம் சென்ற நிலையில் மீண்டும் வீட்டிற்கு சீருடையுடன் 3 பொலிஸாரும்,சிவில் உடையில் 6 பேரும் சென்று வீட்டில் உள்ள உடைமைகளை சேதப்படுத்தினர். வீதியால் சென்றவர்களிடம் எங்களைப் பற்றி விசாரணை செய்துள்ளனர்.

மதியம் 12.30 மணி வரை அங்கே நின்றுள்ளனர். இதனால் நாங்கள் அச்சம் காரணமாக வீட்டிற்குச் செல்லவில்லை. பாடசாலை செல்லும் பிள்ளைகள், வேலைக்குச் செல்லும் பிள்ளைகளும் வேலைக்குச் செல்லவில்லை. தொடர்ந்தும் அடம்பன் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் எங்களைக்காரணமின்றி அச்சுறுத்தி வருகின்றனர். எனவே எனது குடும்பம் பாதுகாப்புடன் வாழ ஆவன செய்யுமாறு வேண்டுகிறோம். - என்று தெரிவித்தார்.



## எதிரியே பாராட்டிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பாடசாலையொன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், விடுதலைப் புலிகளின் தலைவரின் மகள் துவாரகா எனும் பெயரில் மாவீரர் தினத்தில் போலிக் காணொலியொன்று வெளியானமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன கூட, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனைப் புகழ்ந்து பேசியுள்ளார்.

பிரபாகரனுடன் தனக்குக் கருத்து முரண்பாடுகள் காணப்பட்டாலும் அவர் ஒரு நேர்மையான போராளி எனக் கமல் குணரத்ன எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறாக எதிரியே பாராட்டிப் புகழும் தலைவரைப் போலிக் காணொலிகளை வெளியிடுவதன் மூலம் கேவலப்படுத்துவது எமக்கு மனக் கவலையளிக்கின்றது." – என்றார்.

## றொஷான் எம்.பிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

தேசிய விளையாட்டு நிதியத்துக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் வழங்கிய நிதியை அவர் மோசடி செய்துள்ளார் என்று குறிப்பிட்டு இந்த முறைப்பாடு நேற்று செய்யப்பட்டுள்ளது.

## களனிப் பல்கலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மூடப்பட்டிருக்கும் அதேவேளை, அனைத்து மாணவர்களும் இன்று காலை 8 மணிக்கு முன்னர் அந்தந்த விடுதிகளை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு உறங்கிக் கொண்டிருந்த போது மாணவர் குழுவொன்றால் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் காரணமாக பல்கலைக்கழக நிர்வாகம் இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளது.

மேலும் மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் இடையே நிலவிய அமைதியற்ற சூழ்நிலையால், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும், சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் களனி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

## சென்னை விமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
காலை 9 மணி வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் விமான நிலைய ஓடுபாதையில் தேங்கி நிற்கும் தண்ணீரை வெளியேற்றும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அனர்த்தத்தால் இலங்கைக்கான விமான சேவைகள் பலவும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

## வாள்வெட்டுக் குழுவினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சிசிரிவி காணொலிகளைக் கொண்டு வன்முறைக் கும்பலைத் தேடி பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று இரவு வேளையிலும் தெல்லிப்பழை மற்றும் மல்லாகம் பகுதிகளில் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.





இந்த வன்முறைச் சம்பவத்தில் தமக்குத் தொடர்பில்லை எனத் தெரிவித்து ஒருவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்த வன்முறைச் சம்பவத்தால் தனது காருக்குச் சேதம் ஏற்படுத்தப்பட்டது என்று சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நபர் ஒருவரால் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணம் – தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் ஹயஸ் வானில் வந்த இனந்தெரியாத குழு, மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் மீது நேற்று மாலை மாலை 5.30 மணியளவில் சரமாரியாக வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தியது.

இதையடுத்து வன்முறைக் கும்பல் ஹயஸ் வானில் மருதனார்மடம் நோக்கித் தப்பிச் செல்லும்போது துரத்திச் சென்ற பொலிஸார் மல்லாகம் பகுதியில் ஹயஸ் வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர்.

தப்பியோடிய வன்முறை கும்பலைச் சேர்ந்தவர்களைக் கைது செய்ய தெல்லிப்பழை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் அருகில் உள்ள வீதியில் வாள்கள் மற்றும் துப்பாக்கி ரவைகள் காணப்பட்டன.

வாள்வெட்டில் படுகாயமடைந்த 28 வயதான இளைஞர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நீதி இல்லாத அமைச்சர்

'சட்டியைப் பார்த்துப் பானை கறுப்பு என்றதாம்.'

மலையக மக்களின் குடியுரிமையைப் பறிக்கும் சட்டமூலத்திற்கு ஆதரவு வழங்கிய ஜீ.ஜீ. பொன்னம்பலம் இனவாதி என்று குறிப்பிட்டு, நாட்டின் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ ஆற்றிய உரை பற்றிய செய்தியை நோக்கிய போது இந்தப் பழமொழிதான் நினைவுக்கு வந்தது.

யுத்தம் முடிவடைந்து பதினைந்து ஆண்டுகள் பூர்த்தியாகும் வேளையிலும் இன்னும் தமிழ் அரசியல் கைதிகளின் விடயம் முடிவுக்கு வரவில்லை.

தமிழர்களுக்கு எதிராகக் கொடூரப் போரைத் தொடுத்த ராஜபக்ஷ சகோதரர்கள் கூட யுத்தம் முடிந்து ஒரு சில ஆண்டுகளுக்குள் பன்னீராயிரம் முன்னாள் போராளிகளை சமூக வாழ்வுக்குள் விடுவித்தனர்.

2010 இல் தமிழ் மக்களின் முழுமையான பங்களிப்போடு நல்லாட்சி அரசு அதிகாரத்துக்கு வந்த சமயம், எஞ்சியிருந்த தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் கொஞ்சம் கொஞ்சமாக - சத்தம் சந்தடியின்றி - ஆரவாரம் இல்லாமல் - விடுவிக்கும் ஓர் எண்ணப்பாடு ஆட்சி பீடத்திலும் இருந்தது. அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கூட அத்திட்டத்திற்கு ஆதரவானவர்களாகவே இருந்தனர்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்புக்கு அவர்கள் இருவரின் ஆதரவும் ஆசீர்வாதம் கூட இருந்தன.

ஆனால் தமிழ் அரசியல் கைதிகளை மன்னிப்பு அடிப்படையில் விடுவிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செயல்படுத்த வேண்டிய பொறுப்புக் கட்டில் அப்போதும் நீதி அமைச்சராக இருந்து, நந்தியாக விடயத்தைத் தடுத்தவர் இதே விஜேதாஸ ராஜபக்ஷதான் என்பது தெரிந்த உண்மையே.

அத்தகைய இனவாதப் போக்குடைய விஜேதாஸ ராஜபக்ஷ, தமிழர்களின் தலைவராக இருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலத்தை இனவாதி என்று குறை கூறத் தகுதி எதுமற்றவர்.

வடக்கு, கிழக்கு மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர் என்று இப்போது தத்துவம் பிளக்கும் விஜேதாஸ ராஜபக்ஷ தமிழ் மக்கள் ஒருபோதும் அடிமைத்தனமான சமாதானத்தை - அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையிலான அமைதியை - விரும்பவுமில்லை, ஏற்கவும் மாட்டார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

உயிரிழந்த தங்கள் உறவுகளை நினைவேந்தல் செய்வதற்கான உரித்துக் கூட அற்ற அடக்கு முறையை சமாதானமாக - அமைதியாக - ஏற்க தமிழர்கள் ஒன்றும் அறிவற்றவர்கள் அல்லர் என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

படுமோசமான, மிருகத்தனமான பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றப் போகின்றோம் என்று நாடாளுமன்றத்திலும், வெளியிலும், சர்வதேச மட்டத்திலும் பரப்புரை செய்து வருகின்றார் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ.

ஆனால் தமிழ் மக்கள் தமது உறவுகளுக்காக விளக்கேற்றி நினைவேந்துவதைக் கூட அந்தப் பயங்கரவாத தடைச் சட்டத்தை ஏவி விட்டு, அடக்குகின்றது அவரது அரசு. அதற்குப் பின்னால் இருக்கும் கொடூர அநீதியை வெளிப்படையாக உரைக்கும் நீதியோ, திராணியோ, உண்மை தன்மையோ இல்லாத கோழை நீதி அமைச்சர் அவர்.

தமிழரசுப் பிரதிநிதி எம்.ஏ.சுமந்திரன் கூறியமை போல நீதியே இல்லாத நாட்டின் நீதி அமைச்சராக இருக்கும் ஒருவர், நீதி முறை இல்லாமல்தான் பேசுவார். அது தவிர்க்க முடியாத நியாயம்தான்...!

# பெருந்தோட்ட மக்கள் சகலருக்குமே முகவரி பெற்றுக்கொடுக்க உயர்நீதிமன்றம் கட்டளை

பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் அனைத்து மக்களுக்கும் முகவரியை பெற்றுக்கொடுக்கும் செயற்பாட்டினை தொடருமாறு உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

முவன்கந்த தோட்டத்தில் வசித்து வருகின்ற சுரேஷ் ஜீவரத்னம் என்ற இளைஞர் தாக்கல் செய்திருந்த வழக்கு விசாரணைகளை முடிவிற்கு கொண்டு வந்த போதே உயர்நீதிமன்றம் அரசாங்கத்திற்கு இதனை அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, உயர்நீதிமன்ற நீதியரசர்களான எச்.எம்.டி.நவாஸ் மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்கா டி சில்வா, முவன்கந்த தோட்டத்தைச் சேர்ந்த அனைவருக்கும் முகவரியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தமது தோட்டம் உள்ளடங்கலாக அனைத்துப் பெருந்தோட்டப் பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு 200 வருடங்களாக கிடைக்காதுள்ள முகவரியை பெற்றுக்கொடுக்குமாறு இந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

# வெள்ளத்தில் தத்தளிக்கும் சென்னை: பொது மக்களுக்கு கடும் எச்சரிக்கை!







மிக்ஜாம் புயல் கரையை கடந்துவிட்டது என அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கும் வரை பொதுமக்கள் வெளியில் வராமல் இருக்க வேண்டும் என இந்திய வானிலை ஆய்வு மைய இயக்குநர் அறிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் மிக அதிக அளவில் சென்னையில் இப்போது மழை பெய்து வருவதுடன் நேற்று பிற்பகல் இது அதி தீவிர புயலாக உருவெடுக்கும் சென்னை வானிலை மைய இயக்குனர் பாலசந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மிக்ஜாம் புயலானது இன்று கரையைக் கடக்கும் போது சென்னையில் தரைக்காற்று மணிக்கு 80 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மைய தலைவர் எச்சரித்துள்ளார்.

பெய்து வரும் கனமழையினால் சென்னையைச் சுற்றியுள்ள ஏரிகள் 98 வீதம் நிரம்பியுள்ளதாக நீர்வளத்துறைச் செயலாளர் சந்தீப் சக்சேனா தெரிவித்துள்ளார்.

மேலும், முக்கிய ஏரிகளின் நீர் நிலையைத் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கரையோரம் வசிக்கும் மக்கள் வெளியேற்றிப் பாதுகாப்பான இடங்களில் தங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஏற்கனவே பல இடங்களில் கரையின் அருகில் உள்ள மக்கள் மீட்கப்பட்டுப் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மிக்ஜாம் புயல் இன்று தெற்கு ஆந்திராவில் கரையை கடக்கவுள்ள நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு விடுமுறை அளித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

பெரும்பாலான வீதிகளில் நீர் தேங்கியிருப்பதால், சென்னையின் முக்கிய சுரங்கப் பாதைகள் அனைத்தும் மூடப்பட்டிருக்கிறன.

துறைமுகங்களில் 3 ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. சென்னை, எண்ணூர், காட்டுப்பாக்கம் துறைமுகங்களில் 5 ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

சென்னையில் பல்வேறு இடங்களில் மரங்கள் முறிந்து வீதிகளில் விழுந்துள்ளன. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் சில இடங்களில் படகுகள் மூலம் மக்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சென்னையில் பெய்து வரும் கனமழையினால், சென்னை உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான நிலைய ஓடுதளத்தில் தண்ணீர் சூழ்ந்துள்ளது.

இதனால் சென்னை விமான நிலையத்தின் புறப்பாடு மற்றும் வருகை சேவைகள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளன.

சென்னை விமான நிலையம் மூடப்பட்டுள்ளதால், 150விமானசேவைகள் வரை சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கூடுதலாக பேரிடர் மீட்புக் குழுவினரை அனுப்பிவைக்குமாறு ஸ்டாலின் கோரிக்கை

மிக்ஜாம் புயல் பாதிப்பு குறித்து தொலைபேசி வாயிலாகக் கேட்டறிந்த உள்துறை அமைச்சர் அமித் ஷாவிடம் தமிழ்நாட்டுக்கு கூடுதலாக தேசிய பேரிடர் மீட்புக் குழுவினரை அனுப்பிவைக்க முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசு செய்திக் குறிப்பில், “வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக உருவாகியுள்ள மிக்ஜாம் புயலினால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புப் பணிகள் குறித்தும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு



கேட்டறிந்தார்.

அப்போது, தமிழக முதல்வர், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள புயல் பாதிப்புகள் குறித்தும், எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

தேசிய பேரிடர் மீட்புக் குழு மற்றும் மாநில பேரிடர் மீட்புக் குழுவினர், அரசு மற்றும் காவல்துறை அதிகாரிகளுடன் இணைந்து துரிதமாக மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும், கூடுதலாக தேசிய பேரிடர் மீட்புக் குழுவினரை தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைத்திடுமாறும் கேட்டுக் கொண்டார். உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொண்ட பிறகு பாதிப்புகள் குறித்து உரிய கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டு தேவைப்படும் உதவிகள் ஒன்றிய அரசிடம் கேட்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தமிழக முதல்வரின் கோரிக்கையை ஏற்று, உள்துறை அமைச்சர் அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று உறுதியளித்தார்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காசாவில் அகதிகள் தங்கியிருந்த பாடசாலைகள் மீது தாக்குதல்!

## - பெருமளவானோர் பலி

காசா நகரத்தில் உள்ள அல்-தர்ராஜ் பகுதியில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த இரண்டு பாடசாலைகளை குறிவைத்து இஸ்ரேலிய படையினர் நடத்திய தொடர்ச்சியான தாக்குதல்களில் குறைந்தது 50 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர் என்று தகவல்கள் தெரிவித்தன.

பாலஸ்தீனிய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் முகவரமைப்பால் நடத்தப்படும் பாடசாலை மற்றும் அல்-தர்ராஜ் பகுதியில் உள்ள தியாகி அசாத் சஃப்தாவி பாடசாலை ஆகியவற்றின் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் மற்றும் பீரங்கிகள் மூலம் சரமாரியான ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் உடல்கள் மற்றும் காயமடைந்தவர்கள் அருகிலுள்ள அல்-ஜெய்டவுன் பகுதியில் உள்ள அல்-அஹ்லி அரபு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.



அப்பகுதி மீது தீவிரமான எறிகணை தாக்குதலின் விளைவாக உயிரிழந்தவர்களின் உடல்கள் மற்றும் காயமடைந்தவர்களை மீட்க பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக மீட்பு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# கத்தோலிக்க ஆராதனையில் ஏற்பட்ட குண்டு தாக்குதலுக்கு ஐ.எஸ். பொறுப்பு



தெற்கு பிலிப்பைன்ஸில் கத்தோலிக்க ஆராதனையின் போது ஏற்பட்ட குண்டு தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

பிலிப்பைன்ஸ் மராவி நகரிலுள்ள மின்டானோ மாநில பல்கலைக்கழகத்தின் உடற்பயிற்சி கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த குண்டு வெடிப்பு தாக்குதலில் நால்வர் உயிரிழந்துள்ளனர். 42 பேருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த பகுதி யில் தொடர்ந்தும் மீட்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன், குறித்த தாக்குதலுக்கு பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பொங்கிபோங் மார்கோஸ் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

பிலிப்பைன்ஸின் ரது ஹோபர் அம்புட்டுத்தான் நகரை இலக்கு வைத்து கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட குண்டு தாக்குதலுக்கு பதிலடியாகவே இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என பிலிப்பைன்ஸ் பாதுகாப்பு அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, அடையாளம் தெரியாதவர்களினால் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் 11 இஸ்லாமிய கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அரசை பைடன் ஆயுதமாக பயன்படுத்தி வருகிறார்: டிரம்ப் குற்றச்சாட்டு!

தன்னுடைய அரசியல் எதிரிகளுக்கு எதிராக அரசை ஆயுதமாக ஜனாதிபதி பைடன் பயன்படுத்தி வருகிறார் என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அயோவா மாகாணத்தின் ஸீடர் ரேபிட்ஸில் நடைபெற்ற குடியரசுக் கட்சி பொதுக்கூட்டத்தில் டொனால்ட் ட்ரம்ப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“பைடனும் அவரது கூட்டாளிகளும் ஜனநாயகத்துக்கு துணை நிற்பது போல் தோற்றமளிக்கின்றனா’. ஆனால், பைடன் அமெரிக்க ஜனநாயகத்தின் பாதுகாவலர் அல்லர்.

ஜனநாயகத்தை அவர் அழித்து வருகிறார்.

போதைப் பொருள் கடத்தல் காரர்களுக்கு எதிராக சீனாவின் குற்றவியல் நீதித் துறை அமைப்பு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது” என்று தெரிவித்துள்ளார்.




# பார்வையற்றோருக்கு இனி விசேட வாக்குச் சீட்டுகள்!

## தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை

எதிர்வரும் அனைத்து தேர்தல்களிலும் கட்புலனற்றோருக்கான விசேட வாக்குச் சீட்டுகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தகைய நபர்களுக்காக அனைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குச் சீட்டுகள் விநியோகிக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள 10 வாக்களிப்பு நிலையங்களில் முன்னோடி திட்டமாக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றியடைந்ததாக அவர் கூறியுள்ளார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான நாடாளுமன்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

செவித்திறன் குறைபாடுள்ள சமூகத்தினரின் தேவைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லக்கூடிய வசதிகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்படுமென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.

அங்கவீனமுற்ற சமூகத்தினருக்கு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இம்முறை வரவு – செலவுத் திட்டத்தில் 600 பஸ்களை கொள்வனவு செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளதால், மாற்றுத்திறனாளிகளுக்காக சில பஸ்களை கொள்வனவு செய்து முன்னோடி திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பில் நாடாளுமன்ற அமர்வில் முன்மொழியவுள்ளதாக மாற்றுத்திறனாளிகளுக்கான நாடாளுமன்ற மன்ற குழுத் தலைவர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

# டெங்குக் காய்ச்சல் பரவும் வேகம் அதிகரிப்பு: கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் ஆபத்து

மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்ட டெங்கு நோயாளர்களில் 80 வீதமானோர், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே பதிவாகியுள்ளனர் என கொழும்பு மாவட்ட சுகாதார பணிப்பாளர், வைத்தியர் சந்தன கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் பதிவான டெங்கு நோயாளர்களில் 50 வீதமானோர் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர்.

கொழும்பு நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் அதிகளவு டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். டெங்கு நுளம்புகள் பதிவாகும் இடங்களும் கண்டறியப்பட்டுள்ளன.




அதனை தவிர, தெஹிவளை, பத்தரமுல்ல, கடுவல ஆகிய பகுதிகளில் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயமுள்ளதாக கொழும்பு மாவட்ட சுகாதார பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

மழையுடனான வானிலையினால் டெங்குக் காய்ச்சல் அதிகரிக்கும் சாத்தியமுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவிக்கின்றது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் 76 ஆயிரத்து 847 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதுவரையான காலப்பகுதியில் 46 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.




# 35 இலங்கை வீட்டுப் பணியாளர்கள் குவைத்தில் இருந்து நாடு மீண்டனர்

**(ரஸீன் ரஸ்மின்)**

இலங்கைக்கு வரமுடியாமல் குவைத்தில் நீண்ட காலமாக வீசா இன்றி சட்ட விரோதமாக தங்கியிருந்த 35 இலங்கை வீட்டுப் பணியாளர்கள் நேற்றுக் காலை குவைத்திலிருந்து நாடு கடத்தப்பட்டு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இக்குழுவினர் நேற்றுக் காலை 06.35 மணியளவில் குவைத் விமான நிலையத்தில் இருந்து, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL-230 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ளனர்.

குவைத்தில் இருந்து இலங்கைக்கு வர முடியாமல் அங்குள்ள இலங்கைத் தூதரகத்தில் பதிவு செய்திருந்த இலங்கையர்களே இவ்வாறு நாடு கடத்தப்பட்டனர்.

ஒரு ஆண் வீட்டுப் பணியாளரும், 34 வீட்டுப் பெண் பணியாளர்களும் இக்குழுவில் அடங்குகின்றனர்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு, குடிவரவுத் திணைக்களம், நீதி அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் இந்த வீட்டுப் பணியாளர்களை இலங்கைக்கு அனுப்ப குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகம், நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி, வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான வழக்குகள் தீர்க்கப்பட்டு, தற்காலிக கடவுச்சீட்டுகள் தயாரிக்கப்பட்டு, விமான பயணச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு சம்பளம் மற்றும் பிற சலுகைகளை திரும்பப் பெறுவதற்கான வாய்ப்பை இலங்கை தூதரகம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தற்காலிகமாக மூடப்பட்டிருந்த புதிய களனி பாலம் மீள திறப்பு

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த புதிய களனி பாலம் நேற்று முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய திருத்தப்பணிகள் காரணமாக களனி பாலம் மூடப்பட்டிருந்தது.

திருத்தப் பணிகளின் இரண்டாம் கட்டத்தின் கீழ் இந்தப் பாலம் டிசம்பர் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 09 மணி முதல், டிசம்பர் 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 06 மணி வரை மீண்டும் மூடப்படவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மூன்றாம் கட்டத்தின் கீழ் டிசம்பர் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 09 மணி முதல் டிசம்பர் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 06 மணி வரை புதிய களனி பாலம் மூடப்படவுள்ளது.

பாலம் மூடப்படும் காலப்பகுதியில் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு பொலிஸார் மக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.



# நாடு கடத்தப்பட்ட தமிழர்கள் மீள நாடு திரும்ப வேண்டும்!

## ஜீவன் தொண்டமான் கோரிக்கை



சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இலங்கையில் இருந்து பலவந்தமாக நாடு கடத்தப்பட்ட இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள், மீண்டும் நாடு திரும்ப வேண்டும் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் இந்திய உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பை வரவேற்று, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர்களை இந்திய – இலங்கை ஒப்பந்தம் அடிப்படையில் இந்திய பிரஜைகளாக அங்கீகரிக்க வேண்டும் என உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை, மத்திய அரசுக்கு உத்தரவிட்டிருந்தது.

இதனை வரவேற்றுள்ள அமைச்சர் ஜீவன் தொண்டான், வரலாற்று தவறை சீர்செய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துவருகிறார் எனத் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மலையக மக்களுக்கு நீதி மற்றும் நியாயத்தை நிலைநாட்டுவதற்கான நல்லிணக்க பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளதுடன், 10 பேர்ச்சஸ் காணி உரிமையும் வழங்கப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த நடவடிக்கைகள் மாத்திரம் போதுமானதல்ல என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பலவந்தமாக நாடு கடத்தப்பட்டுள்ள மக்கள் இலங்கை திரும்ப வேண்டும் என்பதே தனது கோரிக்கையாகும் என கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் இணைந்து பணியாற்றத் தாம் தயாராக இருக்கிறார் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார்.



# கொழும்பில் இருந்து மும்பைக்கு விசேட விமான சேவை அறிமுகம்

கொழும்பிலிருந்து மும்பைக்கு விசேட விமான போக்குவரத்துச் சேவையை ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தச் சேவையின் மூலம் கொழும்பு மற்றும் மும்பைக்கு இடையில் பயணிப்போரின் எண்ணிக்கை 50 வீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் மூலம் மும்பையிலிருந்து வரும் பயணிகளுக்கு கொழும்பினூடாக சிங்கப்பூர், பாங்கொக், லண்டன், சிட்னி, பாரிஸ், மெல்பன் உள்ளிட்ட சில பகுதிகளுக்கு பயணிக்க கூடியதாக இருக்குமென ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் தற்போது இந்தியாவின் புதுடெல்லி, பெங்களூர், ஹைதராபாத், கொச்சி, மதுரை மற்றும் திருவனந்தபுரம் ஆகிய நகரங்களுக்கு 100க்கும் மேற்பட்ட விமான சேவைகளை இயக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# டெங்கு நோய் யாழிலும் தீவிரமாகப் பரவுகின்றது

யாழ் மாவட்டத்தில் இந்த வருடத்தின் இறுதிவரையான காலப்பகுதியில் டெங்கு தாக்கத்தால் 2203 நோயாளிகள் இனங்காணப்பட்டனர். இரண்டு இறப்புக்களும் பதிவாகியுள்ளன.

– இப்படித் தெரிவித்துள்ள யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன், வேகமாக பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பொது மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

யாழில் நேற்றுத் தாம் நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ் மாவட்டத்தில் நிலவும் மழையுடனான காலநிலைக்குப் பின்னர் நவம்பர் மாத இறுதி வாரத்தில் இருந்து டெங்குநோயின் பரம்பல் சடுதியாக அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

யாழ் மாவட்டத்தில் இந்த வருடத்தின் இறுதிவரையான காலப்பகுதியில் 2,203 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். இரண்டு இறப்புக்களும் பதிவாகியுள்ளன.

யாழ் மாவட்டத்தில் இந்த வருடத்தின் செப்ரெம்பர் மாதத்தில் 110 நோயாளிகளும், ஒக்டோபர் மாதத்தில் 118 நோயாளிகளும் நவம்பர் மாதத்தில் 427 நோயாளிகளும் டிசம்பர் மாதத்தின் முதல் மூன்று நாள்களில் 82 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

நவம்பர் மாதத்தில் கூடிய நோயாளர்கள் நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலேயே இனங்காணப்பட்டுள்ளனர்.

நவம்பர் மாதத்தில் அதிகூடிய நோயாளிகள் இனங்காணப்பட்ட நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் செப்ரெம்பர் மாதத்தில் 19 நோயாளர்களும் ஒக்டோபர் மாதத்தில் 23 நோயாளர்களும் நவம்பர் மாதத்தில் 108 நோயாளர்களும் டிசம்பர் மாதத்தின் முதல் மூன்று நாள்களில் மாத்திரம் 34 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அதிகளவான நோயாளர்கள் கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி மற்றும் வண்ணார் பண்ணை ஆகிய பிரதேசங்களில் இருந்து இனங்காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயின் பரம்பல் சடுதியாக அதிகரிக்கும் இந்த சூழ்நிலையில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை உடனடியாக துரிதப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலகங்களில் அவசர டெங்கு தடுப்பு செயலணி கூட்டங்கள் இன்று (04.12.2023) இடம்பெற்றன. இதன் அடுத்தகட்டமாக கிராமிய மட்ட டெங்குத் தடுப்பு செயலணி கூட்டங்களை உடனடியாக நடத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உடனடியாக சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். வீடுகளில் பொதுமக்கள் தமது வீடுகளையும் வீட்டுச் சுற்றாடலையும் பார்வையிட்டு டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களை அழிக்க வேண்டும்.

வீட்டுச் சுற்றாடலில் காணப்படும் நீரேந்தும் கொள்கலன்களான சிரட்டைகள், இளநீர்க் கோம்பைகள், தகரப்பேணிகள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், ஐஸ்கிறீம் கப், பொலித்தீன் பைகள், பழைய ரயர்கள், தண்ணீர்ப் போத்தல்கள் போன்றவற்றை அகற்ற வேண்டும்.

குறிப்பாக சேகரிக்கப்படும் கொள்கலன்களை உள்ளூராட்சி மன்றங்கள் அகற்றுவதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளன.

பாடசாலைகளில் அதிபர் ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் மாணவர்கள் சிரமதான அடிப்படையில் பாடசாலை வளாகத்தில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழிக்க வேண்டும்.


அரச, தனியார் அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், வணக்கஸ் தலங்கள், பொதுச் சந்தைகள் போன்ற இடங்களைச் சிரமதான அடிப்படையில் சுத்திகரிக்க வேண்டும். பராமரிப்பின்றி காணப்படும் காணிகள் மற்றும் வீடுகளை உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் உடனடியாக துப்பரவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

தற்போதைய காலப்பகுதியில் காய்ச்சல் காணப்பட்டால் உடனடியாக தகுந்த வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் பொது மக்கள் அனைவரும் டெங்குநோயைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பினை நல்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். – என்றார்.

# தேசிய விளையாட்டுப் பேரவை; புதிய உறுப்பினர்கள் நியமனம்

## அர்ஜுன ரணதுங்க இடத்துக்கு மையா






தேசிய விளையாட்டுப் பேரவைக்கான புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ புதிய உறுப்பினர்களை பெயரிட்டுள்ளார்.

15 பேரை கொண்ட இந்த பேரவையின் தலைவராக மையா குணசேகர பெயரிடப்பட்டுள்ளார்.

முன்னாள் கிரிக்கெட் வீரர் சிதத் வெத்தமுனி, பேராசிரியர் அர்ஜுன டி சில்வா, சட்டத்தரணி பண்டுக கீர்த்திநந்த உள்ளிட்டவர்களும் அதில் அடங்குகின்றனர்.

முன்னதாக தேசிய விளையாட்டுப் பேரவையின் தலைவராக இலங்கை கிரிக்கெட் அணியின் அர்ஜுன ரணதுங்க செயற்பட்டிருந்தார்.



# மஸ்கெலியா - நோட்டன் பிரதான வீதியில் பகுதியளவில் வீதி தாழ் இறங்கும் அபாயம்

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

நோட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரிவான்னெலிய பத்தனை எனும் பகுதியில் வீதி தாழ் இறங்கியுள்ளது.

தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழையின் காரணமாகவே இவ்வாறான தாழ் இறக்கம் ஏற்பட்டுள்ளதாக நோட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான அனர்த்தத்தினால் வீதியில் பயணிப்போர் - முக்கியமாக வாகன சாரதிகள் - அவதானமாக இந்த வீதியைப் பயன்படுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் இந்த வீதி மேலும் பல இடங்களில் தாழ் இறங்கும் அபாயம் உள்ளது.

# வணிகப் பொருள்கள் ஏற்றுமதியில் வீழ்ச்சி

கடந்த 2022ஆண்டு ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடத்தின் ஒக்டோபர் மாதத்தில் இலங்கையின் வணிகப் பொருள்களின் ஏற்றுமதி 14.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த ஒக்டோபர் மாதத்தில் இலங்கையின் வணிகப் பொருள்களின் ஏற்றுமதி 298 மில்லியன் அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளதாக அந்தச் சபை குறிப்பிட்டுள்ளது.

# சர்சைக்குரிய மற்றொரு நிகழ்வுக்கு விண்ணப்பம்

(ந.லோகதயாளன்)


யாழ்ப்பாணம், டிச.05

யாழ். நகரில் கடந்த நவம்பர் மாதம் 4ஆம் திகதி ஒரு ஹோட்டலில் இடம்பெற்று சர்ச்சையை உருவாக்கிய - பெண்களும் பங்கு பற்றிய - ஆடல் பாடலுடன் கூடிய நிகழ்வை ஒத்த மற்றுமோர் நிகழ்விற்கு அனுமதி கோரப் பட்டுள்ளது.

நவம்பர் மாதம் மேற்படி நிகழ்வை சமய, கலாசார விழுமியங்களை பாதிக்காத வகையில் சட்டத்திற்கு உட்பட்டவாறு நடாத்துமாறு மாநகர சபை அறிவுறுத்தல் வழங்கியதன் பெயரில் விடுதி உரிமையாளரும் இடம் வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்நிகழ்வில் மது விருந்தும் இடம்பெற்றதோடு 16 வயது நிரம்பிய சிறுமிகளும் பங்குகொண்டமை கண்டு கொள்ளப்பட்டதனால் அது தொடர்பில் பெரும் விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன. இதனால் இம்முறை அனுமதி கோரியமை தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபை கடும் பிடி பிடித்துள்ளது.

இதன் காரணமாக இந் நிகழ்வினை அனுமதிக்கவே முடியாது என யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளர் ஒப்பமிட்டு யாழ்ப்பாணம் பொலிஸாருக்கும் ஹோட்டல் உரிமையாளருக்கும் எழுத்தில் அறிவித்துள்ளார் என அறிய வந்தது.





# மன்னார் அரச அதிபராக கனகேஸ்வரன் நியமனம்?

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.05

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கனகேஸ்வரனை மன்னார் மாவட்டச் செயலாளராக நியமிப்பதற்கு இன்றைய அமைச்சரவையின் ஒப்புதலிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மருதங்கேணிப் பிரதேச செயலாளராக பணியாற்றி பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தின் மேலதிக அரச அதிபராகப் பணியாற்றிய க.கனகேஸ்வரன் நிர்வாகசேவையின் விசேட தரத்திற்கு தேர்வான நிலையில் நவம்பர் மாதம் 23 ஆம் திகதியில் இருந்து வடக்கு மாகாண சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

இதேநேரம் கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் வெற்றிடமாக காணப்படும் மன்னார் மாவட்ட அரச அதிபர் பதவிக்கு தற்போதைய வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கனகேஸ்வரனை நியமிப்பதற்காக இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் அமைச்சரவையின் ஒப்புதலிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் ஒப்புதல் கிடைத்தால் அடுத்த வாரம் முதல் கனகேஸ்வரன் மன்னார் மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஞாயிறு ஆராதனைக்குச் செல்லாத காரணத்தால் சிறுமி மீது தாக்குதல்

## அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்ப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.05




சாகவச்சேரியில் உள்ள தேவாலயத்திற்கு ஞாயிறு ஆராதனைக்குச் செல்லவில்லை என்பதற்காகப் பங்குத் தந்தை ஒருவரால் தாக்கப்பட்டார் எனக் கூறப்படும் சிறுமி ஒருவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றின் பங்குத் தந்தையே இவ்வாறு சிறுமியைத் தாக்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சிறுமியின் தந்தை கத்தோலிக்கராக உள்ளபோதும் தாயார் சைவ சமயத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில் சிறுமி தேவாலயத்திற்குச் செல்வது கிடையாது. தந்தையாருடன் சில சமயம் தேவாலயம் சென்று வரும் பழக்கம் உடையவர் என்றும் கடந்த சில நாள்கள் தேவாலயம் செல்லாத சிறுமியை அழைத்த. பங்குத் தந்தை தாக்கினார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி இன்று மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# இன்றைய ராசி பலன்கள் - 05.12.2023




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். மேலும் உங்கள் அனுபவம் விரிவடையும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் மோதல்கள் ஏற்படும் என்பதால் வார்த்தைகளில் கவனம் தேவை. பொறுமையாக இருக்க வேண்டும். விமர்சனங்களை விளையாட்டாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் இருவரிடையே காணப்படும் குறைந்த புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் நட்பான முறையில் அணுக இயலாது.

இன்று பணம் சம்பந்தப்பட்ட முடிவுகள் எடுக்க ஏதுவான நாள் அல்ல. புதிய முயற்சிகள் தவறான பலன்கள் மற்றும் நஷ்டத்தை ஏற்படுத்தலாம்.

தலைவலியால் அவதிப்பட நேரலாம்.




உங்கள் லட்சியங்களை அடைய கடுமையாகப் போராட வேண்டும். உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்தி அமைதியாக இருக்க வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தள்ளிப்போடுவது நல்லது.

பணிகள் அதிகமாக காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை உருவாக்கும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இயலாது.

குடும்ப நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகளை சமாளிக்க வேண்டியிருக்கும்.

தந்தையின் உடல் நிலை திருப்திகரமாக இருக்காது. பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும். உங்கள் இலக்கில் வெற்றி பெற வேண்டும் என்ற உறுதி காணப்படும். விரைந்து முடிவெடுக்கும் வகையில் நேர்மறை எண்ணங்கள் காணப்படும்.

பணிகளை அனுபவித்து செய்து மகிழ்வீர்கள். சக பணியாளர்களுடன் உறவு நல்ல முறையில் இருக்கும். அலுவலகத்தில் மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும்.

உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் விழா ஒன்றைப் பற்றி உங்கள் துணையுடன் கலந்தாலோசிப் பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்கள் சேமிப்பு அதிகரிக்கும் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் பிரியமானவர்களின் வீட்டு விசேஷத்திற்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் மனோபலம் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




உங்கள் அன்றாட செயல்களை கவனமாக செய்ய வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். உங்கள் மனதில் சஞ்சலமான எண்ணங்கள் காணப்படும். ஆன்மீகத்தில் ஈடுபடுவதன் மூலம் மனக் கட்டுப்பாட்டை அடையலாம்.

அதிகரிக்கும் பணிகள் காரணமாக உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை தக்க வைக்க இந்த உணர்வை தவிர்த்தல் வேண்டும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவில் போதுமான பணம் காணப்படாது. தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களை பாதிக்கும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். உணர்ச்சிவசப்படாமல் இருக்க வேண்டிய நாள். இன்று நேர்மறையான பலன்கள் கிடைக்க உங்கள் உணர்வுகளை கண்காணிக்க வேண்டும்.

பணியிடத்தில் காணப்படும் சவால்கள் காரணமாக ஓய்விற்கு நேரம் கிடைக்காது. திட்டமிட்டு பணிகளை முறையாக ஆற்ற வேண்டும்.

உங்கள் உணர்ச்சிகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அத்தகைய உணர்வுகளை தவிர்ப்பது நல்லது.

குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக அதிக பணம் செலவு செய்ய நேரும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்றைய தினம் யதார்த்தமான அணுகுமுறை தேவை. உங்கள் வளர்ச்சியில் தடைகள் காணப்படும். இன்று சராசரியான பலன்களே காணப்படும்.

இன்று பணியிடத்தில் வெற்றி காண்பதற்கு கடினமான முயற்சி வேண்டும். திறமையாக பணியாற்ற திட்டமிட வேண்டும்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக தேவையற்ற செலவுகள் செய்ய நேரும்.

உணவுமுறையில் கவனம் தேவை. உணவு ஒவ்வாமை ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் லட்சியங்களை அடைந்து மகிழ்ச்சி காணும் நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும். நீங்கள் வளர்ச்சிப் பாதையில் முன்னேறுவீர்கள்.

உங்கள் பணியில் திருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து நல்லாதரவு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொண்டு அன்பை வளர்ப்பீர்கள்.

உங்கள் கையிருப்பு பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். அதிக பணம் சம்பாதிக்கவும் சேமிக்கவும் அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்கும்.

உங்களிடம் காணப்படும் நம்பிக்கை உணர்வு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சீராக இருக்கும்.




உங்கள் வளர்ச்சிக்கு உத்திரவாதம் அளிக்கும் வகையில் சாதகமான பலன்கள் கிடைக்கும். இன்று உங்கள் திறமைகளை வெளிக்கொணரலாம். வெற்றி பெறுவதற்கான உறுதி உங்களிடம் காணப்படும்.

சகபணி யாளர்களின் நல்லாதரவு பெருகும். பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். இதனால் பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இதனால் இருவருக்குமிடையே உறவுப் பிணைப்பு வலுவாக இருக்கும்.

பொருளாதார பாதுகாப்பு காணப்படும். இன்று கணிசமான தொகை சம்பாதிப்பீர்கள். திருப்தியான நிலை இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.12.2023




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். சாதகமற்ற பலன்களை தவிர்க்க பிறருடன் உரையாடும் போது கவனமாக இருக்க வேண்டும். இசை கேட்பது, பொழுதுபோக்கு நிகழ்சிகளில் ஈடுபடுவது மனதிற்கு ஆறுதல் தரும்.

சக பணியாளர்களால் சில இடையூறுகளை சந்திக்க நேரும். பணிச்சூழல் சுமுகமாக இருக்காது. அனுசரணையான போக்கு தேவை.

துணையுடன் நயமாகவும் அமைதியாகவும் உரையாட வேண்டும். குடும்ப பிரச்சினை பற்றிய விவாதங்கள் சுமுகமாக இருக்காது. உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். அதிகரிக்கும் செலவுகள் காரணமாக உங்களால் சேமிக்க இயலாது.

ஓய்வெடுப்பதற்கு நேரம் கிடைக்காது.




இன்று சில ஏமாற்றங்களை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையைஅளிக்கும்.உங்கள்செயல்களில் தாமதம் காணப்படும். சவாலான சூழ்நிலைகளை சந்திக்க முறையாக திட்டமிட வேண்டும்.

பணியிடத்தில் காணப்படும் கடினமான சூழ்நிலை காரணமாக பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இதனால் உங்கள் ஆர்வம் குறைவது போல தோன்றும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை நன்கு பாதிக்கும்.

தேவையற்ற செலவுகள் காரணமாக உங்கள் பணம் விரயமாகும். பண சம்பாத்தியமும் குறைவாக காணப்படும்.

கால் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று உங்களுக்கு இனிமையான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் தொடங்க இந்நாளை பயன்படுத்துங்கள். அது உங்களுக்கு நல்ல பலன் தரும். நம்பிக்கை எண்ணத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும். உங்கள் சக பணியாளர்களிடமிருந்து ஆதரவும், மேலதிகாரிகளின் நன்மதிப்பும் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணை மகிழ்ச்சி கொள்வார்.

பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு கணிசமாக உயரும்.

இன்று ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று நற்பலன்கள் கிடைப்பது உறுதி. உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். உங்களின் ஆன்மீக ஈடுபாடு நற்பலன்களை அளிக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள். உங்களின் சிறந்த செயல்திறன் மூலம் நற்பெயர் பெறுவீர்கள். கடின உழைப்பின் மூலம் வெற்றி கிடைக்கும்.

உங்கள் அன்பான நேர்மையான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு வளரும்.

இன்று நிதிநிலையில் பாதுகாப்பு காணப்படும். வங்கியிருப்பு கணிசமாக உயரும். கையிலிருக்கும் பணத்தை பயனுள்ள நோக்கங்களுக்கு செலவு செய்வீர்கள்.

